DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC 314/2019

Prosecution witness – PW 5

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.ராமச்சந்திரன் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1, A2 present.)

29.08.2024 at 03.00 PM

<u>முதல் விசாரணை</u> :

1. நான் தற்போது கடலாடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகளான சார்பு ஆய்வாளர் திரு.சுந்தரபாண்டி மற்றும் திரு.நாகராஜபிரபு ஆகியோர் தற்போது பணியிடமாறுதல் ஆகி சென்று விட்டார்கள். தற்போது அவர்களுக்கு உடல்நிலை சரியில்லாததால் அவர்களால் சாட்சியம் அளிக்க இயலவில்லை. சார்பு ஆய்வாளர் திரு.சுந்தரபாண்டி மற்றும் திரு.நாகராஜபிரபு ஆகியோர் கடந்த 2017–2018 ம் ஆண்டு கடலாடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர்களாக பணிபுரிந்து வந்தார்கள் என்பதை ஆவணங்கள் மூலம் தெரிந்து கொண்டேன். அவர்கள் சார்பாக ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

3. சார்பு ஆய்வாளர் திரு.சுந்தரபாண்டி என்பவர் கடந்த 03.12.2017 ம் தேதி 17.00 மணிக்கு நிலையப் பொறுப்பில் இருந்த போது திரு.உதயக்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று நிலைய குற்ற எண்.140/2017 இ.த.ச. பிரிவுகள் 457, 511–ன் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும்.

4. பின்னர் அன்றே 18.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முத்துகருங்கண் மற்றும் கருணாமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5

ஆகும். பின்னர் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் வாதியின் பெரியப்பா முருகேசன் என்பவரது வீட்டில் வைத்து அன்று 19.00 மணிக்கு சுமார் 42 செ.மீ. நீளமுள்ள மூக்கருவாள் ஒன்றை கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்துள்ளார். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.6 ஆகும்.

6. கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். கைப்பற்றப்பட்ட வழக்குச்சொத்தான மூக்கருவாள் ஒன்று அ.சா.பொ.1 ஆகும்.

7. பின்னர் சம்பவ சாட்சிகளான உதயக்குமார், சண்முகவேல், முத்துராக்கு, கருங்கண், முருகேசன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

8. பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் இளஞ்செம்பூர் காவல் நிலைய குற்ற எண்.20/2018 வழக்கில் நீதிமன்ற காவலில் இருந்து வருவதை தெரிந்து 1வது எதிரியை 29.04.2018ம் தேதி 12.35 மணிக்கு இராமநாதபுரம் மாவட்ட சிறையில் வைத்து கைது செய்து இந்நீதிமன்றத்தில் PT Warrant பெற்று வழக்கில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார்.

9. பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். 1வது எதிரி இளஞ்செம்பூர் காவல் நிலைய குற்ற எண்.20/2018 வழக்கில் கைது செய்யப்பட்டு விசாரித்தபோது ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

10. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் வழக்கு சம்பவத்தை எதிரிகள் இருவரும் செய்ததாக ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7 ஆகும்.

11. அத்துடன் பணிமாறுதலாகி சென்றதால் வழக்கின் கோப்பை காவல் நிலையத்தில் ஒப்படைத்து சென்றுள்ளார்.

12. பின்னர் வழக்கை சார்பு ஆய்வாளர் திரு.நாகராஜபிரபு என்பவர் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கு ஆவணங்களை பரிசீலித்து 2வது

எதிரியை தேடி வந்த நிலையில் இளஞ்செம்பூர் காவல் நிலைய குற்ற எண்.20/2018 வழக்கில் நீதிமன்ற காவலில் இருந்து வருவதை தெரிந்து 2 வது எதிரியை 02.01.2019 ம் தேதி 12.00 மணிக்கு முதுகுளத்தூர் கிளைச்சிறையில் வைத்து கைது செய்து இந்நீதிமன்றத்தில் PT Warrant பெற்று வழக்கில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார்.

13. அத்துடன் வழக்கு விசாரணை முடித்து 03.01.2019 ம் தேதி எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 457, 511–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

இல்லை.

ஓம்/J.சங்கீதா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி (மு.கூ.பொ)